Taxis

*26. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether it is a fact that a number of Taxis running in Madras City are having defective meters which inflate the charges ; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon ?

வாடகை மோட்டார் வண்டிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கட்டணங்களைக் கூடுதலாகக் காட்டும் குறைபாடுடைய மீட்டர்களைக் கொண்ட பல வாடகை மோட்டார் வண்டிகள் சென்னை மாநகரில் ஓடுகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட அல்லது எடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) குறைபாடுள்ள மீட்டர்களோடு சென்னை மாநகரில் ஓடிக்கொண்டிருக்கிற சில வாடகை மோட்டார் வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(இ) அத்தகைய நேர்வுகளில் அவற்றின் வலவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

திரு. எம். ராஜா அய்யர் : குறைபாடுகள் உள்ள டாக்சி மீட்டர்களில் குறைவான தொகையைக் காட்டும் மீட்டர்களும் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அப்படியிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட புகார் செய்ய மாட்டார்கள்.

Students Co-operative Stores Limited, Raja Sarfoji Government College, Thanjavur

*27. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there was any delay in sending the final audit memorandum for the year 1966-67 to the Students Co-operative Stores Limited, Raja Sarfoji Government College, Thanjavur by the Co-operation Department ; and

(*b*) if so, the reasons therefor ?

[30th November 1970

தஞ்சாவூர் அரசினர் ராஜா சரபோஜிக் கல்லூரியின் மாணவர் கூட்டுறவு சங்கம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர், அரசினர் ராஜா சரபோஜிக் கல்லூரியின் மாணவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, கூட்டுறவுத் துறை, 1966-67ஆம் ஆண்டிற்கான இறுதித் தணிக்கை அறிக்கையை அனுப்பியதில் தாமதம் ஏதும் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) தாமதத்திற்குக் காரணம் கணக்குப் புத்தகங்கள் சரிவர எழுதப்படாமை. இதன் காரணமாக நீண்டகால கடிதப் போக்குவரத்து நடந்து 1966-67-ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் குறிப்பு 1969-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தடைப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தணிக்கையே, 3, 4 ஆண்டுகள் கழித்துத் தான் நடைபெற்றிருக்கிறது. இப்படிக் கணக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ருல், உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படி எடுக்காத காரணத்தாலும், இந்தக் குறிப்பு கடைசியில் வந்ததாலும், பணம் காணுமல் போயிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : பணம் காணுமல் போனது பற்றிய குறிப்பு ஏதும் இங்கில்லே. தணிக்கையைப்பற்றித்தான் இருக்கிறது. 1966-67-ஆம் ஆண்டிற்கான முடிவான தணிக்கைக் குறிப்பு நீண்டகால கடிதத் தொடர்பின் காரணமாக 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில்தான் அனுப்பப்பட்டது. இதை '' Difficulties in reconciliation '' என்பார்கள். நாள்வழிக் குறிப்பையும் லெட்ஜர் பதிவேட்டையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், கணக்கு முன்னுக்குப் பின் முரணுக இருந்ததால், அது பற்றிய கடிதப் போக்குவரத்து நடந்தது. அதை அவ்வளவு காலதாமதமாகக் கருதத் தேவையில்லே.

திரு. ஜி. சுவாமிநாதன் : காலதாமதத்திற்காக நான் சொல்லவில்லே. 1965-66—ஆம் ஆண்டில் நிர்வாகத்தில் இருந்த ஒருவர் பின்னுல் அந்தக் கல்லூரியைவிட்டுச் சென்றுவிட்டார். இதனுல் கால தாமதமானது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குச் சரிவரக் கணக்கு இல்லே. சரிவர இல்லே என்ற தகவல் கிடைக்க 1967 வரை ஆகிவிட்டது. இந்த நிலேமையின் காரணமாக அதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : துரிதமாகத் தணிக்கை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுகிறேன்.